தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035.

தொலைபேசி எண்.044–2951 5590

ஆணை நாள். 02.11.2026

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் : SA- 11029/A/2024

திரு. சி.காசிராஜன் .. **மனுதாரர்**

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.),
ஊராட்சி ஒன்றியம்,
விராலிமலை,
புதுக்கோட்டை மாவட்டம் – 621 316. .. **பொது அதிகார அமைப்பு**

ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 02.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. சி.காசிராஜன், அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.ப.கோபால்சாமி பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது)/ (கி.ஊ.),ஊராட்சி ஒன்றியம், விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 22.04.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுக்கா, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், குமாரமங்கலம் ஊராட்சி & பஞ்சாயத்து அலுவலகத்தால், புதூர் கிராமத்தில் அமைந்துள்ள, ஜோதி ஐஸ்வர்யா கார்டன் /ஐஸ்வர்யா கார்டன் என்ற பெயரில், காலியிட மனை வரைபட அங்கீகாரம்

அனுமதி வழங்கியிருப்பின் அக் கோப்புகளில் உள்ள அனைத்து ஆவணங்களையும் (Note File உட்பட) உள்ளது உள்ளபடி, நகலிட்டு, சான்றொப்பமிட்டு வழங்குமாறு 7 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், 20.05.2024 நாளிட்ட கடிதத்தின்படி பதில் வழங்கி உள்ளார். எபாதுத் தகவல் அலுவலர் பதில் திருப்தி அளிக்காத காரணத்தினால் மனுதாரர் 30.05.2024 நாளிட்ட பிரிவு 19(1)–ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால், மனுதாரர், 21.08.2024 நாளிட்ட பிரிவு 19(3)–ன் கீழ் இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார்.. அம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 02.11.2026 முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ஏற்கனவே 20.05.2024 மற்றும் 27.10.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக அனைத்து இனங்களுக்கான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் தனது தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவிற்கு ஆணையத்தின் அழைப்பாணையை பெற்ற பிறகே தகவல் வழங்கியுள்ளதாகவும், அத்தகவல்களும் முழுமையான தகவல்களாக இல்லை எனவும் ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், இதுநாள்வரையில் முழுமையான தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1) மற்றும் 20(2)இன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொண்டு, முழுமையான தகவல்களைப் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு இனம் 1 மற்றும் 4க்கான முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:–

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனம் 1 மற்றும் 4க்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005–இன்படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது"</u> என்ற <u>முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)–ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 24.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு***

தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகின்றது.

ஒம்/– (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண் SA- 11029/A/2024</u>
பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.),
ஊராட்சி ஒன்றியம்,
விராலிமலை,
புதுக்கோட்டை மாவட்டம் – 621 316.

<u>மனுதாரர்:</u>
திரு.சி.காசிராஜன்,
604–1, சிதம்பரம் நகர்,
மாத்தூர் கிராமம் (ம) அஞ்சல்,
குளத்தூர் தாலுகா,
புதுக்கோட்டை – 622 515

Copy to File
Je/PA 02.11.2026